Registered as a Newspaper in Ceylon

★★ விலை சதம் 10

# ஈழநாடு

மலர் 7 EELA NADU இதழ் 62

National Tamil Daily தேசிய தினசரி (13 4 65)

விசுவாவசு சித்திரை 1 துல்ஹஜ் பிறை 10 செவ்வாய்க்கிழமை

ஈழநாடு
சந்தா விபரம்
இந்தியா – இலங்கை

| | வாரப்பதிப்பு உட்பட | வாரப்பதிப்பு மட்டும் |
|---|---|---|
| 1 வருடம் | 48-00 | 13-00 |
| 6 மாதம் | 25-00 | 6-50 |
| 3 மாதம் | 13-00 | 3-25 |

ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்!

கே. என். எம்.
மீருன் சாஹிப்
தங்கப்பவுண் நகை மாளிகை
யாழ்ப்பாணம்.
போன்: 585

# ஆசிரியர்களின் அரசியல் நடவடிக்கை

## உதவி வித்தியாதிபதி விசாரணை செய்கிறார்

கொழும்பு, திங்கள்

சென்ற பொதுத்தேர்தலில் வெளிப்படையாக அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாகப் புகார் செய்யப்பட்ட சுமார் ஆயிரம் ஆசிரியர்கள் சம்பந்தமாகவும் கல்வி இலாகா உத்தியோகத்தர்கள் பற்றியும் இப்பொழுது விசாரணை ஆரம்பமாகியுள்ளது.

இவ்விசாரணைகளை உதவி வித்தியாதிபதி திரு. சோமபால குணதீரா நடத்துகிறார்.

## 'தமிழரசு யு. என். பி. ஒப்பந்தம் தற்காலிகமானதே'

### எஸ். ஜே. வி. விளக்கம்

காங்கேசன்துறை, திங்கள்

'தமிழரசுக் கட்சிக்கும் யு. என். பி.க்குமிடையே ஏற்பட்டுள்ள உடன்பாடு குறித்து தமிழ்மக்கள் பொறுமையுடனிருந்து பார்க்கவேண்டும். பிரதமர் திரு. டட்லி சேனநாயகா பார்லிமெண்டில் பேசுகையில் தமது 35 வருடகால அரசியல் வாழ்வில் தாம் எவரையும் ஏமாற்றவில்லையென்றும் தாம் தமது வாக்கைக் காப்பாற்றுவேனென்றும் கூறியுள்ளார். தமிழரசுக்கட்சி யு. என். பியுடன் செய்துகொண்டுள்ள உடன்படிக்கையை தற்காலிகமானதென்றே கருத வேண்டும்'

இவ்வாறு தமிழரசுக் கட்சித் தலைவர் திரு எஸ். ஜே. வி. செல்வநாயகம் காங்கேசன்துறைத் தொகுதி மக்கள் தமக்களித்த வரவேற்புக்கு நன்றிதெரிவித்துப் பேசுகையில் தெரிவித்தார்.

காங்கேசன்துறை பட்டின சபை சபா மண்டபத்தில் நடைபெற்ற இந்த வரவேற்புக் கூட்டத்தில் திரு. அ. குமாரகுரு பேசியதாவது:-

'தமிழர்கள் தமது இழந்த

(8-ம் பக்கம் பார்க்க)

## நறுமணம் கமழும் நந்தவனமாக்குவோம்

### யாழ். மேயர் புத்தாண்டுச் செய்தி

யாழ்ப்பாணம், செவ்வாய்

"தேசிய அரசாங்கம் அமைந்துள்ள இச்சமயத்தில் முக்கிய திருநாட்கள் யாவும் ஒருசேர வந்து தேசியவாரமாகியுள்ளது. இது தற்செயல் நிகழ்ச்சியல்ல. ஆண்டவன் செயல். எனவே இந்நாட்டை ஓர் அழகிய நறுமணம் கமழும் நந்தவனமாக்க சங்கற்பம் செய்துகொள்வோம்" என்று யாழ்ப்பாண நகரமேயர் திரு. எஸ். ஸி. மகாதேவா விடுத்துள்ள புத்தாண்டுச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேயர் தமது புத்தாண்டுச் செய்தியில் பின்வருமாறு குறிப்பிட்டிருக்கிறார்:–

கடந்த ஒன்பது வருடங்களுக்கும் அதிகமாக மொழி வெறிக்கும் மதவெறிக்கும் இலக்காகியிருந்த நம் நாடு பொருளாதார சீரழிவை நோக்கி போய்க்கொண்டிருந்தது. ஆயினும் ஆண்டவன் திருவருளால் நாட்டில் கம்யூனிஸ சர்வாதிகாரம் ஏற்படக்கூடிய இக்கட்டானதோர் சூழ்நிலை தவிர்க்கப்பட்டு, சகல சமூகத்தவர்களையும் உள்ளடக்கிய ஓர் தேசிய அரசாங்கம் பதவிக்கு வந்துள்ளது.

தேசிய அரசாங்கம் பதவியில் அமர்ந்தபின் முக்கிய திருநாட்கள் யாவும் ஒருசேர வந்து இவ்வாரத்தை ஓர் தேசியவாரமாக ஆக்கியுள்ளது. இலங்கை மக்களின் நத்தார் பண்டிகை, கிறிஸ்தவ மக்களின் உயிர்த்தெழுந்த திருநாட் பண்டிகை, சிங்கள மக்களினதும், இந்துசமயத்தவர்களினதும் புதுவருடப்பிறப்பு இவையாவும் தேசிய அரசாங்கம் ஏற்பட்டுள்ள இச்சூழ்நிலையில் ஒன்றுசேர்ந்து வந்திருப்பது தற்போது ஏற்பட்டுள்ள தேசிய ஒற்றுமையை தற்செயலான நிகழ்ச்சியாக அல்லாமல் ஆண்டவன் சித்தத்தால் ஏற்பட்ட ஒன்று என எல்லா எண்ணும்படி

(8-ம் பக்கம் பார்க்க)

## 70 யாத்திரீகர் நீரில் மூழ்கினர்

புதுடில்லி, ஏப்ரல் 12

உத்திர பிரதேசத்திலுள்ள ஒரு பாலம் உடைந்து விழுந்ததால் 70 யாத்திரீகர்கள் நீரில் மூழ்கிவிட்டனர்.

இப்பாலத்திலுள்ள தண்டவாளம் பெயர்ந்து விழுந்ததன் காரணமாக 100 யாத்திரீகர்கள் நீரில் மூழ்கினரென்றும், இவர்களில் 27 பேர் காப்பாற்றப்பட்டனரென்றும் இருவரின் சடலங்கள் கண்டு பிடிக்கப்பட்டனவென்றும் ஒரு அறிக்கை கூறுகிறது.

★

## மற்றும் 14 பேர் மூழ்கினர்

ஆந்திரப்பிரதேசத்தில் யாத்திரீகர்களைக்கொண்ட இரு படகுகள் மோதிக்கொண்டதால் 10 பெண்கள் உட்பட 14 பேர் நீரில் மூழ்கி மாண்டனர்.

## 'நீதியின்றி ஜனநாயகமில்லை'

### மந்திரி கருத்து

கொழும்பு, திங்கள்

'நீதி மிகவும் புனிதமானதொன்று, நீதியின்றி ஜனநாயகம் இயங்க முடியாது, சட்ட கோட்பாடுகளை பாதுகாப்பதற்காக தனது பல பிரதிநிதிகளை பார்லிமெண்டில் கொண்டிருப்பதற்காக வழக்கறிஞர் சங்கம் மிகவும் பெருமைப்படவேண்டும்'

இவ்வாறு நீதி மந்திரி திரு ஏ. எப். விஜயமானே கால்பேஸ் ஹோட்டலில், பார்லிமெண்டில் பிரதிநிதித்துவம் வகிக்கும் வழக்கறிஞர்களுக்கு தமிழ்க்கறிஞர் சங்கம் அளித்த இரவு விருந்தொன்றில் கலந்து பேசுகையில் கூறினர்.

சட்டம் தெரிந்த ஒருவர் பார்லிமெண்டில் இருப்பதால், பார்லிமெண்டில் விவாதம் நடைபெறும்போது அவர் தமது அறிவை நன்குபயன்படுத்தக் கூடியதாக இருக்குமென்றும் சட்டம் இயற்றுவதற்கு இவ்வித அறிவு பெரிதும் உதவுமென்றும் மந்திரி தெரிவித்தார்.

## ஐ. தே. கட்சி அரசாங்கத்தை எதிர்க்க வகுப்புவாதம் வழியல்ல

### பீகிங் ஆதரவாளர் அறிக்கை

கொழும்பு, திங்கள்

ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்த்துப் போராடுவதற்கு வகுப்புவாதம் சரியான வழியல்லவென சீன ஆதரவு கம்யூனிஸ்ட் கட்சியின் உயர்பீடம் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் கூறியிருக்கிறது.

"வகுப்புவாதத்திற்கும், அவசரகாலச் சட்டத்திற்கும் பிரதானமாகப் பலியாகுபவர்கள் தொழிலாள வகுப்பினரே. முன்னேற்றச் சக்திகளை முறியடித்து ஐக்கிய தேசியக்கட்சி அதிகாரத்திற்கு வந்தது கடவுள் தந்த சந்தர்ப்பமேயாகும். எனவே ஐக்கிய தேசியக் கட்சியை எதிர்த்துப் போராடுவதற்கு வகுப்புவாதம் வழியல்ல என முன்னேற்ற சக்திகளுக்கு எச்சரிக்க விரும்புகிறோம்.

வகுப்புவாதத்திலும் சிறுபான்மையினர் ஆதரவை யு.என்.

(4-ம் பக்கம் பார்க்க)

## மந்திரிசபையில் டாக்டர்

### ஜே. ஆர். விளக்கம்

கொழும்பு, திங்கள்

'பல சத்திர சிகிச்சைகள் செய்யவேண்டியிருப்பதால் நாம் மந்திரிசபையில் ஒரு சேனைச் சேர்த்துள்ளோம், அவர் இப்போது கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தில் புரையோடியிருக்கும் புற்றுநோயைக் குணப்படுத்த சத்திரசிகிச்சை செய்துகொண்டிருக்கிறார்' என ராஜாங்க மந்திரி திரு ஜே. ஆர். ஜெயவர்தன மவுண்ட்லவேனியா ஹோட்டலில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து பேசுகையில் குறிப்பிட்டார்.

வர்த்தக மந்திரி திரு. எம். வி. பி. பீரிஸைக் குறிப்பிட்டுப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.



வாசக நேயர்களுக்கு
எமது
உளங்கனிந்த
புத்தாண்டு
வாழ்த்து
—
இஸ்லாமிய
அன்பர்களுக்கு
ஈத்முபாரக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறிப்பு இல. L. A. 1234

காணி எடுத்தற் சட்டம்

(அத்தியாயம் 460)

7-ம் பிரிவின்படி அறிவித்தல்

கீழ்க் காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1965-ம் ஆண்டு ஏப்பிரில் மாதம் 9-ம் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானி பத்திரிகை இலக்கம் 14,375 (பகுதி III-ல்) பார்க்கவும்.

ஆ. பெருமையினர்.
உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

அட்டவணை

காணியின் பெயர்:- வென்னிப்பேற்று.
கிராமத்தின் பெயர்:- கயிற்றுதீவு.
காரியாதிகாரியின் பிரிவு:- தீவுப்பகுதி.
ஆரம்ப பட இலக்கமும் துண்டு இலக்கமும். எ 2476இல் துண்டு இல. 1

128

குறிப்பு இல. எல். ஏ. 1226

காணி எடுத்தற் சட்டம்

(அத்தியாயம் 460)

7-ம் பிரிவின்படி அறிவித்தல்

கீழ்க்காணும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணியை எடுக்க அரசாங்கம் உத்தேசித்திருக்கிறது. மேலதிக விபரங்களுக்கு 1965-ம் ஆண்டு ஏப்பிரல் மாதம் 9-ம் திகதி பிரசுரிக்கப்பட்ட இலங்கை அரசாங்க வர்த்தமானி இலக்கம் 14,375 (பகுதி III-ல்) பார்க்கவும்.

ஆ. பெருமையினர்
உதவி அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.

அட்டவணை

காணியின் பெயர்:- செல்லர் வளவு,
கிராமத்தின் பெயர்: மானிப்பாய்.
காரியாதிகாரி பிரிவு: வலிகாமம் மேற்கு.
ஆரம்ப பட இலக்கமும் துண்டு இலக்கமும்: எ. 2473 இல் துண்டு இல. 1.

124

## அறிவித்தல்

யாழ்ப்பாணக் கலாசாலை
பழையமாணவர் சங்கம்

இவ்வாண்டு விசுவாவசு வருடப் பிறப்பை முன்னிட்டு சித்திரைத் திங்கள் நான்காம் நாள் (16-4-65) வெள்ளிக்கிழமை மாலை 8 மணிக்கு மேற்படி சங்கக் கூட்டம் சாவகச்சேரி யாழ்ப்பாணக் கலாசாலை புதிய மண்டபத்தில் நடைபெறும். அத்தருணம் பழைய மாணவர்கள் யாவரும் தவறாது சமுகமளிக்கும்படி வேண்டப்படுகின்றனர்.

மு. சோமசுந்தரம்
காரியதரிசி.

128

## வரி விளம்பரம்

### தேவை

அ. ப. நோ. கூ. சங்க நெசவு நிலையத்தில் நெசவுவேலை செய்வதற்கு பெண்பாலாரிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. நெசவு ஆசிரியப் பயிற்சித் தராதரம் உடையோர் தகுதிகளைக் குறித்து 18-4-65க்கு முன் சங்கக் காரியதரிசிக்கு விண்ணப்பிக்கவும், காரியதரிசி, பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், அளவெட்டி. 42

### விற்பனைக்கு

பாவித்த இலங்கை முத்திரைகள் விலைக்கு வாங்கப்படும் விபரங்களுக்கு: த. பெட்டி இல. 896, கொழும்பு. (P O Box: 896, Colombo) 2

### அறிவிப்பும் அன்போடு வேண்டலும்

25-4-64ல் சிவபதம் அடைந்த திருவளர் வைத்தியலிங்கம் போட் இராஜகோபால் எஞ்சினியர் அவர்களின் முதலாவது சிராத்த தினம் 14-4-65 புதன்கிழமை வருகிறது.

குறித்த ஆட்டைத்திவச தினத்தையும், அன்னதானமும் அன்று பகல் 12 மணிவரையில் எஞ்சினியர் அவர்களது 6ம் நம்பர் மகாதுமை காந்தி வீதியில் உள்ள இல்லத்தில் சிறப்பாக நிகழ இருக்கிறது. உறவினர், அன்பர்கள் யாவரும் வந்து சிறப்பித்துப் பங்குபற்றி ஏகுமாறு இலட்சியத்தில் பெரியாரின் மனைவியும் மக்களும் ஆகிய நாம் வேண்டிக்கொள்ளுகிறோம்.

ஸ்ரீமதி W F இராஜகோபாலும் மக்களும்
'சாந்திநிகேதனம்'
(SANTINIKETAN)
6, மகாதுமை காந்தி வீதி,
யாழ்ப்பாணம்.
6-4-65 84

### பிரபல சோதிடம்

சாதகப் பலன் ரூபா 3-00
ரேகை பலன் ரூபா 2-00
ஆரூட பலன் ரூபா 1-00
S. சிவகுருநாதன், 160, அரசடி ரோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். 44

### தொய்வு, இரைப்பு

குணப்படுத்த உத்தரவாதம். மந்திமோர், ஆரிய வைத்தியர் சமூகர்கள் எல்லோரும் சிகிச்சைபெற்ற விபரங்கள் அடங்கிய குறலோக் இனும் தொய்வுக்கு 10 நாள் மருந்து. 12-50 இரைப்புக்கு 10 நாள் மருந்து 10-50.

வைத்தியர் பரிபூரணம், கலையகம் வியாபார் கோவில், யாழ்ப்பாணம்

### POST OF MANAGER

Applications will be received for the above post, by Messrs. "Elvee Traders" (under new management Hendrick Building 503/1 N. H M Abdul Cader Road (Former Reclamation Road) Colombo up to 9th April 1965, from those falling within the following categories -

(I) G. C. E. Qualified with previous experience in accounts, office administration and Commercial Correspondence,

(II Age Group 20-30 years

Salary- All inclusive monthly salary of Rs 240 - rising up to Rs 500/- annual increments of Rs. 5 -

Security- Rs 2500/- in cash and Rs. 250 /- fidelity bond

Copies of certificates in respect of character education, experience and age should be enclosed

SECRETARY
0th april 1965.

### 'தொடர்ந்து பதவியில் இருக்கமாட்டோம்'

கொழும்பு திங்கள்

பாராளுமன்றத்தில் தேசிய அரசாங்கம் எதிர்க்கட்சியினரால் தோற்கடிக்கப்படும் நிலை ஏற்பட்டால் இருபத்துநான்கு மணித்தியாலங்களுக்குள் அது ராஜினாமா செய்ய தயங்காது என ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன தெரிவித்தார்.

மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாது போனால், தேசிய அரசாங்கம் தொடர்ந்து பதவியிலிருக்க முயற்சிக்காது என்றும், திரு ஜெயவர்த்தன மேலும் கூறினார்.

### பஜனை

தொல்புரம், திங்கள்

தொல்புரம் ஆதி முத்துமாரி அம்மன் ஆலயத்தில் புதுவருடப் பிறப்பன்று விசேஷ பூசையும் கூட்டுப்பிரார்த்தனையும் நடைபெறும். திரு. சி. வரதராசா தலைமையில் இப்பஜனை நடைபெறும்.

### அரசாங்க பலம் அதிகரிக்குமாம்

கொழும்பு, திங்கள்


இன்னும் இரண்டு மூன்று நாட்களுக்குள் மேலும் மூன்று பாராளுமன்ற அங்கத்தவர்கள், அரசாங்கக் கட்சியில் சேருவார்கள் என்று ஹபரதுவவில் நடைபெற்ற கூட்டத்தில் தபால் மந்திரி திரு. மொன்டேக் ஜெயவிக்கிரமா பேசுகையில் கூறினார்.

தற்பொழுது அரசாங்கக் கட்சியில் 96 பாராளுமன்ற அங்கத்தவர் உள்ளனரென்றும் விரைவில் இந்த எண்ணிக்கை [illegible] மேலும் [illegible] கூறினார்.

அன்பர்கட்கும் ஆதரவாளர்கட்கும்
எங்கள் உளங்கனிந்த
ஹஜ்ஜுப் பெருநாள்
நல்வாழ்த்துக்கள்
ஏ. கே. எஸ்.
ஜுவலலர்ஸ்
யாழ்ப்பாணம்
Dial: 519

தந்தி — வணக்கம் போன்: 506
புதுவருடப் பிறப்பை முன்னிட்டு
அன்பர்கள் அபிமானிகள் ஆதரவாளர்கள்
அனைவருக்கும் எங்கள் அன்பான
வாழ்த்துக்கள் உரித்தாகுக
ஆ. அப்பையா அன் கோ.,
புடவை வியாபாரம்
தலைமைஸ்தாபனம் கிளை
82, கே. கே. எஸ். ரோட், 54, பெரியகடை,
யாழ்ப்பாணம்.
பங்காளர்கள்: ஆ. அப்பையா,
செ. காசிப்பிள்ளை

புதிய கிரமபோன்
றெக்கோட்களுக்கும்
ரேடியோ
பிரச்சனை
எதுவானாலும்
உடன் தொடர்பு
கொள்ளவும்



எஸ். சுலைமான்கண்டு & பிறதர்
86, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
Phone: 265 Cable: "JAHAANS"

அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!



அழகுக்கு அழகு செய்யும்
மின்னும்
தங்க, வைர
நகைகளுக்கு
புதிய ஆபரண மாளிகை
NEW JEWEL PALACE
கன்னாதிட்டி, யாழ்ப்பாணம்.
போன்: 7042

புது வருட வாழ்த்துக்கள்
ஹரன் என்ஜினியரிங் வேக்ஸ்
பல பொருள் உற்பத்தியாளர்கள்
33, கோவில் வீதி, யாழ்ப்பாணம்.
தொலை பேசி: 7172

எமது புதுவருட நல்வாழ்த்துக்கள்
"செல்லம்ஸ்"
84-86, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 436

அனைவருக்கும் எமது
புத்தாண்டு வாழ்த்துக்கள்!



★ ஆலய உற்சவங்களுக்கும்
★ காணிவல் மற்றும் களிப்புறும் வைபவங்களுக்கும்
தற்கால நவீன முறையில்
வடஇலங்கையில் மின்சக்தியளிக்கும்
தனிப்பெரும் ஸ்தாபனம்
இவ்வாண்டு
உற்சவ தேவைகளுக்கு
முன்கூட்டியே
பதிவுசெய்து கொள்ளுங்கள்
போன்: 7016
நியூரோன் எலெக்றிக்கல்ஸ்
228, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அறிவித்தல்

தமிழ்-சிங்கள புதுவருடத்தை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை (13-4-65) ஈழநாடு காரியாலயத்துக்கு விடுமுறையாதலால் புதன்கிழமை (14-4-65) மட்டும் 'ஈழநாடு' வெளிவரமாட்டாது.

## மணிவாக்கு

அடியான் தன் சகோதரனுக்கு உதவிசெய்து கொண்டிருக்கும் காலமெல்லாம் இறைவன் அவ்வடியானுக்கு உதவி செய்து கொண்டிருக்கிறான்.

— நபிகள்நாயகம் (ஸல்)


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily. Post Box 49, Jaffna. Telegrams: 'EELA NADU' Jaffna Phone: 389.

யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு சித்திரை மீ 1 உ. (13 4-65)


## நல்லாண்டே வருக!

இலங்கையில் வாழும் இரு பெரும் சமூகங்களான இந்து, பௌத்த மக்களுக்கு இன்று புத்தாண்டு பிறக்கிறது. மற்றுமொரு முக்கிய சமூகமான இஸ்லாம் மக்கள் இன்று ஹஜ் பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். கிறிஸ்தவ திருநாளான பெரிய வெள்ளி உயிர்த்தெழுந்த பெருநாள் ஆகிய திருநாட்களும் அடுத்தடுத்து வருகின்றன. இலங்கையில் வாழும் முக்கிய நான்கு சமூக மக்களையும் ஒற்றுமைப்படுத்தும் நற்பணியைச் செய்து கொண்டு பிறக்கும் விசுவாவசுப் புத்தாண்டை 'வருக, வருக நல்லாண்டே' என மகிழ்ச்சியுடன் வரவேற்போம்.

இலங்கையில் இன்று மிக அவசிய தேவையாக இருப்பது தேசிய ஒற்றுமை. சென்ற சில ஆண்டுகளாக இந்நாட்டில் துரதிர்ஷ்டவசமாக இந்த ஒற்றுமை நிலவவில்லை. இன, மத வேற்றுமைகள், குரோதங்கள் நிலவின. அதன்விளைவாக நாட்டின் முன்னேற்றம் தடைப்பட்டது. மக்கள் பீதியுடன் வாழ்ந்தனர். இந்த நிலை மாறி சமூக, சமய ஒற்றுமைக்கு வழி வகுக்கும் முறையில் இன்று 'தேசிய அரசாங்கம்' அமைந்துள்ளது. தேசியப் பெருநாட்களும் ஒருமித்து வருகின்றன. இந்த நற்பணியை உருவாக்கிக்கொண்டு விசுவாவசு ஆண்டு இன்று பிறக்கிறது.

விசுவ என்பது அகிலம் அல்லது உலகம், ஆ-என்றால் ஒன்று சேர்த்தல் அல்லது ஒன்றித்திருத்தல், வசு-வாழுதல், உயிர்த்தல் என்றுபொருள் கொள்ளப்படுகிறது. எனவே விசுவாவசு என்பதை "ஒன்றித்து வாழும் உலகம்" என்று சொல்லலாம்.

இன, மத, பிற வேற்றுமைகள் நீங்கி உலகெலாம் ஒரே குடும்பமாக வாழ வேண்டுமென்பதே நல்லோர் விருப்பம். இந்த நல்ல விருப்பம் நாட்டிலும் நாள் அதிக தூரத்திலில்லையென்பதையே விசுவாவசு எமக்கு அறிவுறுத்துகிறது. நம்நாட்டில் இனி, இன, மதப் பூசல்களுக்கு இடமில்லையென்றும் சகல மக்களுக்கும் சமநீதி வழங்கப்படுமென்றும் ஆட்சிபீடமேறியுள்ள 'தேசிய அரசாங்கம்' பிரகடனப்படுத்தியுள்ளது. 'வாள் எடுத்தவன் வாளால் மடிவான்' என்பது கிறிஸ்துநாதர் வாக்கு. இனப் பூசலையும் மதப்பூசலையும் கிளப்புபவர்களும் பலாத்காரத்தைத் தூண்டிவிடுபவர்களும் அவற்றிற்கே பலியாவார்கள் என்பது இலங்கை மக்கள் சமீப காலங்களில் கண்ட தீர்ந்த உண்மை.

இந்நாட்டில் வாழும் தமிழ் பேசும் சிறுபான்மை மக்களைப் பொறுத்தவரையில் இதுவரை கட்டுண்டோம், பொறுத்திருப்போம், காலம் மாறும் என்ற நிலை இருந்தது. இன்று காலம் மாறி நீதி நியாயம் கிடைக்கக் கூடிய நல்ல சூழ்நிலை தோன்றியுள்ளது. இனியும் சோர்வடைந்திருப்பது கூடாது. விசுவாசத்துடன் இன்று பிறக்கும் விசுவாவசு ஆண்டின்மீது விசுவாசம் வைத்து தமது முன்னேற்றத்துக்கும் நாட்டின் முன்னேற்றத்துக்கும் உழைக்க வேண்டும். தேசிய ஒற்றுமையை ஏற்படுத்த இந்நாட்டின் இதர சமூக, சமயத்தவர்களுடனும் ஒத்துழைக்க வேண்டும்.

# புதுவருஷப் பஞ்சாங்கங்கள்

## ஜி. சி. ஈ. பரீட்சை முடிவுகள்

கொழும்பு, திங்கள்

கடந்த டிசம்பர் மாதம் நடைபெற்ற ஜி. சி. ஈ. பரீட்சை முடிவுகள் அடுத்த மாத ஆரம்பத்தில் வெளிவரும் எனத் தெரியவருகிறது.

இப்பரீட்சைக்கு 211,000 பரீட்சார்த்திகள் தோற்றினர்கள்.

## தேர் உற்சவம்

நீர்வேலி, திங்கள்

நீர்வேலி கந்தசாமிகோவில் தேர் புதன்கிழமையும் தீர்த்தம் வியாழக்கிழமையும் நடைபெறும். அன்று பகல் விசேட பூசையும் பஜனையும் முதலியனவும் இடம்பெறும்.

## புதிய உத்தியோகத்தர்கள்

யாழ்ப்பாணம், திங்கள்

'இளைஞர் விவசாயிகள் சங்கம் நாட்டின் பொருளாதார முன்னேற்றத்திற்காகப் பெரிதும் உழைத்து நாட்டை வளக்குவிக்க முடியும்' என்று சமூகசோதி முதலியார் சி. தியாகராசா மானிப்பாய் இளைஞர் விவசாயிகள் சங்கத்தை திருத்தியமைப்பதற்காக கூட்டப்பட்ட கூட்டமொன்றில் பேசும்பொழுது குறிப்பிட்டார்.

கீழ்க்காண்ட உத்தியோகத்தர்கள் சங்கத்தின் உறுப்பினர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திரு. சி. தியாகராசா. தலைவர்: திரு. எஸ். சோமஸ்கந்தன். உப தலைவர்:- திரு செ. சண்முகநாதன், காரியதரிசி:- திரு. ஏ. மகாதேவராசா. உப காரியதரிசி:- திரு சி. யோகநாதன். பொருளாளர்:- திரு சி. மகாதேவா. ஐந்து பேரடங்கிய நிர்வாக சபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

## விசுவாவசு வருஷ திருக்கணிதபஞ்சாங்கம்

ஆண்டுதோறும் பிரசுரிக்கப்படும் திருக்கணித பஞ்சாங்கம் இவ்வருடமும் வெளியிடப்பட்டுள்ளது. இப்பஞ்சாங்கம் 78ம் வருடமாக பிரசுரிக்கப்பட்டுள்ளது. மட்டுவிலிலுள்ள திரு. சி. சுப்பிரமணியஐயர் எல். ஆர். ஏ. எம். அவர்களால் கணிக்கப்பட்டு இப்பஞ்சாங்கம் வெளியிடப்பட்டுவருகின்றது.

பஞ்சாங்க பரிபாஷை விளக்கம்; நக்ஷத்திரங்களின் அதிதேவதை, விவாகப் பொருத்தம், திருமணாரம்ப விஷயங்கள் பல்லி சொற்பலன், கோசரபலன் முதலான சகலவிஷயங்களும் திருக்கணித பஞ்சாங்கத்தில் அடங்கியிருக்கின்றன.

இப்புதுவருடத்தில் வெளிநாட்டு விவகாரங்களில் பெருமுயற்சியும் வல்லரசுகளுடன் வெற்றிகரமான உடன்பாடுகளும் வெடிவிபத்துக்களும், உணவுக்கஷ்டமும், நாட்டில் களவு அதிகரித்தலும் பஞ்சம் பிணி முதலியன அதிகரித்தலும், மின்சாரத்தால் மரணம் அதிகரிப்பும் இடம்பெறும் என விசுவாவசு வருஷப் பலனில் கூறப்பட்டுள்ளது.

1968-ம் ஆண்டு ஜோதிஷ ரத்னாகர பத்திரிகையின் சில பகுதிகளும் சில அரிய நூல்களும் தீக்கிரையானபோதிலும் திருக்கணித பஞ்சாங்க நிலையத்தினர் தொடர்ந்து தம் பணியில் ஈடுபட்டு வருவது எவராலும் வரவேற்கத்தக்க விஷயமாகும். பஞ்சாங்கத்தின் 63-ம் பக்கத்தில் வருஷ பிறப்புக் கருமவிதிகள் யாவும் தெளிவான முறையில் கூறப்பட்டுள்ளது. பல அரிய விஷயங்கள் இப்பஞ்சாங்கத்தில் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது இது எவருக்கும் உபயோகமாகும் என்பதில் ஐயமில்லை. இதன் விலை ரூபா 2 கிடைக்குமிடம் சி. சுப்பிரமணியஐயர் திருக்கணித பஞ்சாங்க நிலையம் மட்டுவில் வடக்கு சாவகச்சேரி

## பதவி உயர்வுடன் இடமாற்றம்

கோண்டாவில், திங்.

கோண்டாவில் சைவப் பிரகாச வித்தியாசாலையில் ஆசிரியராகக் கடந்த 35 வருடங்களாகக் கடமையாற்றிய திரு. சங்கரப்பிள்ளை பதவி உயர்வு பெற்று கந்தர்மடம் சைவவித்தியாசாலை உப அதிபராக நியமிக்கப்பட்டுள்ளார். இவருக்கு முறைமையாக மாணவர்களும் ஆசிரியர்களும் தேநீர் விருந்தளித்தனர்.

## தலைமன்னார்—தனுஷ்கோடி கப்பல் சேவை

மன்னார், திங்கள்

தலைமன்னார் துறைமுகத்தில் புயலுக்குப்பின், கடந்த 110 நாட்களாக தென்னிந்தியாவைச் சேர்ந்த எட்டு ஊழியர்களுடன் 'இடிமுறையைக் கழிந்த' தலைமன்னார்—தனுஷ்கோடி கப்பல் தற்பொழுது துரிதமாகப் பழுதுபார்க்கப்படுகின்றது. இது இம் மாதம் 15-ம் திகதி கடலில் ஓடவிடப்படுமென்று தெரிய வருகின்றது.

## புதுவருட பஜனை

கோண்டாவில், திங்.

புதுவருடப்பிறப்பன்று மாலை இணுவில் சிவகாமி அம்மன் கோவில் முன்றலிலிருந்து தியாக சத்திய ஜீவன சன்மார்க்க இயக்கத்தலைவர் தியாகர் சுவாமிகள் தலைமையில் பஜனைக் கோஷ்டியொன்று ஆரம்பமாகி காலையாக மானிப்பாய் [illegible] செய்யும்.

## விசுவாவசு வருஷ வாக்கிய பஞ்சாங்கம்

வழமைபோல் வெளியிடப்படும் வாக்கியப் பஞ்சாங்கம் இம்முறையும் வெளியிடப்பட்டிருக்கின்றது. புதுவருடப் பிறப்புடன் எல்லா வீடுகளிலும் பஞ்சாங்கங்களும் குடிபுகும். கிட்டத்தட்ட 300 ஆண்டுகளாக கொக்குவில் பிரம்மஸ்ரீ இ. சி. இரகுநாதய்யரின் முன்னோர்கள் தவறாது வெளியிட்டு வந்த வாக்கியப் பஞ்சாங்கம் விசுவாவசு வருஷத்துக்கும் சிறப்பான முறையில் பல அம்சங்களையும் ஒன்று சேர்த்து சிறப்பான முறையில் வெளிவந்திருப்பது வரவேற்கத்தக்க தொன்றாகும்.

புதிய வருடத்தில் கமத்தொழில் மேன்மையுறும் என்றும் கால்நடைகள் பெருகுமென்றும்; சிசுமரணம் பெருகுமென்றும் வாக்கிய பஞ்சாங்கம் கூறுகின்றது. புதுவருடப் பிறப்பன்று எவ்வாறு மங்கல கருமங்கள் செய்யவேண்டுமென்றும்; மருத்து நீர் எவ்வாறு வைத்து புதுவருடப்பிறப்பன்று நீராடவேண்டுமென்றும் விபரமாக பஞ்சாங்கத்தில் கூறப்பட்டுள்ளது. பஞ்சாங்கம் தெளிவாக பிரசுரிக்கப்பட்டிருப்பது வரவேற்கத்தக்கதாகும்.

பஞ்சாங்க பரிபாஷை விளக்கம், இராசியின் நட்சத்திர பேதி, நவக்கிரக நட்பு; ஆட்சி விவாகப் பொருத்தம் கோசாரப்பலன்கள், வருஷப் பண்டிகை தினங்கள், குருபூசை தினங்கள், சங்காபிஷேக தினங்கள் முதலான விடயங்களும் பஞ்சாங்கத்தில் அடங்கியிருக்கின்றன. இவைகள் யாவும் அடங்கிய பஞ்சாங்கம் சோதிடர்களுக்கு மட்டுமன்றி எவர்க்கும் வேண்டிய விபரங்கள் அடங்கியிருக்கின்றன. இதன் விலை ரூ 2. கிடைக்கும் இடம் பிரம்மஸ்ரீ இ. சி. இரகுநாதய்யர், சோதிட பரிபாலன மடம், கொக்குவில்.

## சைவ இளைஞர் மாமன்றம்

யாழ்ப்பாணம், செவ்வாய்

வடமாகாண சைவ இளைஞர் மாமன்ற வருடாந்தக் கூட்டம் வண்ணை நாவலர் வித்தியாசாலையில் மாலை 4-30 மணிக்கு நிகழும்.

கோப்பாய் எம். பி. திரு சி. கதிரவேற்பிள்ளை, முன்னாள் உதவி வித்தியாதிபதி திரு. சி. உ. சோமசேகரம் வழக்கறிஞர் ஆர். என். சிவப்பிரகாசம் ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

## ஐக்கிய தேசியக்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பியுடன் நெருக்கமாக்கவே உதவிபுரிவதாயிருக்கும். வகுப்புவாதத்தைக் கிளப்புவதற்குப் பதில் ஏகாதிபத்தியவிரோத-பிரபுத்துவ விரோத சேவைக்கே நாம் கிளப்பவேண்டும். சரியான திட்டத்தின் கீழ் சகல யு. என். பி. எதிர்ப்பு, ஏகாதிபத்திய எதிர்ப்பு நடவடிக்கைகளை நாம் பலப்படுத்தவேண்டும். ஐக்கிய தேசியக் கட்சி பதவிக்குவந்துள்ளதன் மூலம் நாட்டின் அரசியல் நிலைமை மாறிவிட்டதுமட்டுமின்றி, முன்னேற்றச் சக்திகளுக்கு அதிக பெரும் பொறுப்பையும் சுமத்தியிருக்கிறது.

குறிப்பாக தொழிலாள வகுப்பினர் சம்பந்தமாக இப்பொறுப்பு அதிகரித்திருக்கிறது. நமது பிரிவுகளை நீக்கி, ஒரு பொது எதிரிக்கு விரோதமான ஐக்கிய முயற்சி வேண்டும்" என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

## நாடும் நடப்பும்

இன்று இந்துக்களுக்கும் பௌத்தர்களுக்கும் புத்தாண்டு பிறக்கிறது. இஸ்லாமிய மக்கள் இன்று ஹஜ்பண்டிகையைக் கொண்டாடுகிறார்கள். எல்லோருக்கும் எமது நல்வாழ்த்து.

• • •

சென்ற சில வருடங்களைவிட இம்முறை இலங்கை மக்கள் இத்திருநாட்களை அதிக மகிழ்ச்சியுடன் கொண்டாடுவார்கள். மக்கள் மனதில் புதிய நம்பிக்கை தோன்றியிருப்பதே இதற்குக் காரணம். இந்த நம்பிக்கைக்கு விசுவாவசு ஆண்டு துரோகம் செய்யாமல் விசுவாசமாக இருக்குமென்றே நம்புவோம்.

• • •

புத்தாண்டுப் பிரதிக்ஞையைப் பற்றி உங்களிற் பலருக்கும் நன்கு தெரியும். 1965-ம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் திகதி (அதாவது இங்கிலிஷ் வருடப்பிறப்பில்) சிகரெட் புகைப்பதை நிறுத்திக் கொள்வதெனப் புதுவருடப் பிரதிக்ஞை செய்து கொண்ட நண்பர் இன்று முதல் சிகரட் புகைப்பதை நிறுத்திக்கொள்வதாகப் பிரதிக்ஞை செய்துள்ளாராம்! அடுத்த வருடமும் இதே பிரதிக்ஞையைச் செய்யாமலிருந்தால் தான் ஆச்சரியம்!

• • •

இலங்கையில் தேசிய ஒற்றுமையைப் பற்றி பல்வேறு 'ராகத்தில்' இதற்கு முன் பாடிவந்த நமது சகோதர மாலிகள் இப்பொழுது புதிய 'ராகத்தில்' பாடத் தொடங்கியுள்ளன. இதற்கு முன் மொழிப்பிரச்சினையை நியாயமான முறையில் தீர்த்து வைக்க வேண்டுமென்றோ, தமிழர்களுக்கும் உரிமை அளிக்க வேண்டுமென்றோ அவர்களின் உரிமை மறுக்கப்பட்டுள்ளதென்றோ எழுதாத 'டெயிலி மிரர்' பத்திரிகையும் இன்று 'நாம் தமிழர்' பூச்சாண்டி காட்டிய 'லங்கா' 'தவச' பத்திரிகைகளும் தேசிய ஒற்றுமையின் அவசியத்தையும், 'வகுப்புவாதத்தை'க் கண்டித்தும் இன்று எழுதுகின்றன. இதைவிட மகிழ்ச்சியான புத்தாண்டுச் செய்திகள் தமிழ் பேசும் மக்களுக்கு வேறு என்ன இருக்க முடியும். இந்த நல்ல மனப்பான்மை அந்தப் பத்திரிகைகளுக்கு நீடித்திருக்க வேண்டுமென்பதே நமது புத்தாண்டுப் பிரார்த்தனை.

• •

புத்தாண்டுப் பலனின்படி இலங்கையில் பிறப்பு விகிதம் அதிகரிக்குமென்று நமது சோதிடர் கூறுகிறார். குடும்பக் கட்டுப் பாட்டுத் திட்டத்தை தீவிரமாக அமுல் நடத்துவதற்குத் தனியாக ஒரு அமைச்சை நிறுவினால் என்ன! என்று 'குடும்பம் பெருத்த' நண்பர் கேட்கிறார். பிரமச்சாரிப் பிரதமருக்குச் சொல்லிப் பார்க்கட்டும், அவருக்கு அதைப் பற்றிக் கவலையில்லாவிட்டாலும் நாட்டு மக்களைப் பற்றிய கவலை இருக்கத்தான் செய்யும்.

—ஊர்சுற்றி

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தியாகத் திருநாள்

— அல்ஹாஜ் ஏ. எம். ஏ. அஸீஸ் —

"சுதந்திரம் பெற்ற ஒரு சமுதாயத்தினர் தங்கள் மதத்தினதும் தாய் நாட்டினதும் பெருமைக்காக உழைக்க உறுதி பூணுவதிலும் அடிமைப்பட்ட சமுதாயத்தினர் இத்தினத்தில் கோக்கின்றி ஓரிடத்தில் ஒன்று கூடுவதிலும் நதுப்பெருநாளின் புனிதத்தன்மை அழுங்டிக்கப்படுகிறது"—மகாகவி இக்பாலின் மேற்கண்ட கூற்று நமுல் அழுஹா தினத்தன்று நாம் ஞாபகமூட்டிக் கொள்வதற்குப் பொருத்தமுடைத்தாகும். ஹஜ் யாத்திரையின் உண்மையான தத்துவத்தையும் முஸ்லிம் சமுதாயத்தில் அதற்குரிய இடத்தையும் இந்த உணர்ச்சியோடுதான் நாம் உணர்ந்துகொள்ளல் வேண்டும்.

எவ்வித ஆத்மீக அம்சங்களுக்கும்மதிப் விசுவாசமோசாதய முன்னேற்றமானது, நமுன் பல பிரச்னை கிளப்பி, நமக்கு இன்று சவால்விட்டுக்கொண்டிருக்கிறதென்பதை நாம் உணருவது பொருத்தமானது ஆகவே நமது சன்மார்க்கத்தின் கருவூலத்திலேயே நமது சிந்தனையைச் செலுத்தவும் புதிய ஏற்பாடுகளை பூரணமாக உதறித்தள்ளி, நமது பழம் பெரும் புனித இஸ்மாத்தை இறுகப்பற்றிக் கொள்ளவும் நாம் கடமைப்பட்டிருக்கிறோம். இஸ்லாமிய சன்மார்க்கம் நபி இப்ராஹீம் (அலை) அவர்களின் நன்னெறியாகும். நபி இப்ராஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் மீது அப்பழுக்கற்ற விசுவாசம் கொண்டிருந்தவர். எப்பொழுதுமே அவனது ஆணைக்குக் கீழ்ப்படியும் குணம்படைத்தவர். அதற்கும் அல்லாஹ்வுக்காக எத்தகைய தியாகமும் செய்யச் சித்தமாயிருந்தவர். தமது செல்வப்புதல்வனைக்கூட அல்லாஹ்வுக்காகக் "குர்பான்" செய்ய அவர் மனப்பூர்வமாகத் தயாரானார்!

வருடந்தோறும் ஹஜ்ஜின் மூலம் இந்தச் சம்பவந்தான் ஞாபகமூட்டப்படுகிறது. உண்மையான தியாக உணர்ச்சியின்றி சொந்த விஷயத்திலோ சமூகவிஷயத்திலோ எவ்வித முன்னேற்றமும் சாத்தியமில்லையென்பதை மகத்தான இந்தத் தியாகத் திருநாள் சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறது. தனிநபரது போக்கிலும் பண்பிலும் தலைமையிலும் அவசரமான புனரமைப்புகளை உண்டுபண்ணாவிடில் வெறும் சடங்குகளுக்கு யாதொரு அர்த்தமுமிருக்காது. ஒரு முஸ்லிம் பக்தன் ஒரு மிருகத்தைப் பலியிடும்போது, உண்மையிலேயே தன் விடயமுன்ன மிருகபாவத்தைப் பலியிடவேண்டியிருக்கின்றான். அவ்வாறில்லையெனில் மதச்சடங்கு இருக்குமேதவிர, அதில் இலட்சிய தத்துவம் இருக்காது அல்லாஹ, திருக்குர்ஆனிலே பின்வருமாறு கூறுகிறான்:—

(இவ்வாறு குர்பானிசெய்த போதிலும்) அதன் மாமிசமோ, அல்லது அதன் ரத்தமோ அல்லாஹ்வை அடைந்துவிடுவதில்லை. உங்களுடைய பயபக்திதான் அவனை அடையும். அல்லாஹ் உங்களுக்கு நேரான வழியை அறிவித்ததற்காக (அவனுக்கு நீங்கள்) குர்பான் கொடுத்து அவனை நீங்கள் பெருமைப்படுத்தும் பொருட்டு இவ்வாறு அவைகளை உங்களுக்கு வசப்படுத்தித் தந்தான். (நபியே) இவ்வாறு (குர்பான் கொடுத்து) நன்றிசெய்வோருக்கு நீர் நன்மாராயம் கூறுவீராக! (22:37)

முஸ்லிம்களிடையே பரம்பரையாகப் பிரசித்திபெற்றிருக்கும் ஒரு சம்பவம் புனித ஹஜ்ஜின் இந்த அம்சத்தைத் தான் விளக்கிக் காட்டுகிறது. இஸ்லாமிய திமிஷ்கு நகரைச் சேர்ந்த அஹ்மத் அஷ்காக் என்ற செம்மானைப்பற்றியதாகும். அச்சம்பவம் பின்வருமாறு வரையப்பட்டிருக்கிறது.

"அறபா மைதானத்தில் ஹாஜிகளெல்லோரும் கூடியிருந்து போய்விட்டார்கள் அங்கு இருளும் மௌனமும் குடிகொண்டிருந்தன. அதுகாலை, மிஸ்ரிலிருந்து ஹஜ்ஜுக்கு வந்திருந்த ஷெய்கு தின்னூனில் மிஸ்ரி என்ற ஞானிமாத்திரமே அந்த மைதானத்தில் தங்கியிருந்தார். அப்போது திடீரென்று அப்பெரியாருக்கு ஓர் அசரீரி கேட்டது. இந்த வருடம் ஹஜ்ஜுக்காக வந்தவர்களில் மக்காவுக்கே வராத அஹ்மத் அஷ்காக் என்பவரின் ஹஜ்தான் முதலாவதாக அல்லாஹ்வால் ஏற்றுக்கொள்ளப்பட்டது" என்பதுதான் அந்தச் சப்தம், ஆச்சரியத்திலாழ்ந்த ஷெய்கு தின்னூனின் மௌனத்தினைக் கலைத்தது மக்காவுக்கு வராமலேயே அங்கீகரிக்கப்பட்ட ஒரு ஹஜ்ஜை நிறைவேற்றிய பாக்கியசாலியான அந்தச் செம்மானைக் கண்டு பிடிப்பதற்காக செய்கு தின்னூன் திமிஷ்கு நகருக்கு வரைந்தோடினார். அங்கு அஹ்மது அஷ்காக்கின் குடிசையைத் தேடிப்பிடித்தார் அவரோடு சேமம் விசாரித்துப் போதுவாக உணவு அருந்தினார். தொடர்ந்து இருவருக்குமிடையே சம்பாஷணை நடந்தது.

செய்கு தின்னூன் "சகோதரரே! நீர் இவ்வருடம் ஹஜ்ஜுக்குப் போனீரா?"

அஹ்மத் அஷ்காக்: "இல்லை"

செய்கு தின்னூன்: "ஏன்?"

ஒரு நீண்ட பெருமூச்சுக்குப்பிறகு அஹ்மத் பேசினார்:

"அது நீண்ட துக்ககரமான கதை. கடந்த நாற்பதுவருடகாலமாக ஹஜ்ஜுக்குப் போக வேண்டுமென்பதற்காக நான் கொஞ்சம்கொஞ்சமாகப் பணம் சேர்த்துவந்தேன். என்னைப் போன்ற வறியவன் வேறென்ன செய்யமுடியும்? இவ்வருடம் நான் ஹஜ்ஜுக்குப் போவதற்கு ஆயத்தமானேன். ஆனால் எதிர்பாராத ஒரு சம்பவம் நடைபெறவே எனது திட்டம் பூராவும் சிதைந்துவிட்டது. ஒருநாள் ஒரு தேவைக்காக என் சிறிய மகனை அடுத்த வீட்டுக்கு அனுப்பினேன். அவன் அழுதுகொண்டு திரும்பிவந்தான். நான் காரணம் கேட்டதற்கு "அவர்கள் இறைச்சி தின்றுகொண்டிருக்கிறார்கள். நான் ஒரு துண்டு கேட்டதற்குத் தரமுடியாதென்கிறார்கள்" என்றான் சிறுவன்.

எனக்கு ஆத்திரம் வரவே குழந்தை மனதைப் புண்படுத்திய அடுத்த வீட்டுக்காரனைத் திட்டினேன்.

என் சத்தத்தைக் கேட்ட அடுத்த வீட்டுக்காரன் என்னிடம் வந்து "கடந்த ஐந்து நாட்களாக உணவின்றிப் பட்டினி கிடந்தோம் இன்றும் பட்டினி கிடக்கமுடியாமல் வயலில் செத்துக்கிடந்த ஒரு மிருகத்தின் இறைச்சியை எடுத்துவந்து சாப்பிடத் தொடங்கினோம். இந்த இறைச்சியை உங்கள் குழந்தைக்கு நாம் எப்படிக் கொடுப்பது? சொல்லுங்கள்!" என்று கேட்டார்.

நான் திடுக்கிட்டேன் அவரை நன்கு அவதானித்தேன். கண்கள் குழிவிழுந்து கன்னங்கள் ஒட்டி உதடுகள் வாடிப்போயிருந்தன. அவரது கைகால்கள் நடுநடுங்கிக்கொண்டிருந்தன. கொடிய பஞ்சப் பேய்தான் மனித உருவத்தில் என்முன்னே தோற்றமளிப்பதுபோல் உணர்ந்தேன்.

நான் உடனே அவரிடம் மன்னிப்பு கேட்டுக்கொண்டேன். அவர் போனபிறகு எனது மனப்போராட்டம் ஆரம்பமாகியது.

"அல்லாஹ்வை வழிபடுத்த நான் மக்காவுக்குப் போவதா? அடுத்த வீட்டில் அல்லாஹ்வின் அடிமை பட்டினிகிடக்க நான் ஹஜ்ஜுக்குப் போகவேண்டும்! இந்தக் கேள்விகள் என் மனதை வாட்டிய வண்ணமேயிருந்தன, ஈற்றில் என் மனம் ஒரு முடிவுக்கு வந்தது.

ஹஜ்ஜுக்குப் போவதற்காக நாற்பது வருடகாலமாக நான் சேமித்திருந்த பணத்தையெல்லாம் அடுத்த வீட்டுக்காரரிடம் கொண்டுபோய்க் கொடுத்தேன். "நீங்கள் நன்குக உண்டு உடுத்து வாழுங்கள்! இவ்வருடம் உங்களுடைய இந்த உடைந்த குடிசை எனது கஃபாவாக இருக்கட்டும்" என்று கூறிவிட்டு மனத்திருப்தியுடன் வந்தேன்.

ஷெய்கு தின்னூனின் கண்களிலிருந்து கண்ணீர் ஓடியது. அன்புமேலீட்டால் அஹ்மதை ஆலிங்கனம்செய்து கொண்டே "சகோதரரே! யாத்திரைக்கான சரியான இடத்தை நீங்கள் மாத்திரமே கண்டுகொண்டீர்கள்" என்று கூறி விடைபெற்றுச் சென்றார்.

இஸ்லாத்தில் மதச்சடங்குகள் இருக்கின்றன. எனினும் அந்தச் சன்மார்க்கம் மதச்சடங்குகளைமாத்திரம்கொண்ட ஒரு மதமல்ல. பின்வரும் திருக்குர்ஆன் வசனம் இதனைச் சந்தேகமறத் தெளிவுபடுத்துகிறது:

மேற்கிலோ கிழக்கிலோ உங்கள் முகங்களை நீங்கள் திருப்பிவிடுவதனால் மாத்திரம் நீங்கள் நன்மை செய்தவர்களாக ஆகிவிடமாட்டீர்கள். (உங்களில்) எவர் அல்லாஹ்வையும் கடைசி நாளையும் மலக்குகளையும் வேதங்களையும் நபிமார்களையும் மெய்யாகவே விசுவாசித்து (தனக்கு விருப்பமுள்ள பொருளை அல்லாஹ்வுக்காகப் பந்துக்களுக்கும் ஏழைகளுக்கும் வழிப்போக்கர்களுக்கும் யாசகர்களுக்கும் விடுதலை விரும்பிய அடிமைகள் கடன்காரர்கள் முதலியவர்களுக்கும் கொடுத்துத் தொழுகையும் கடைப்பிடித்து ஸகாத்தும் கொடுத்துவருகின்றாரோ அவரும், வாக்குறுதிசெய்த சமயத்தில் தங்களுடைய வாக்குறுதியைச் சரிவர நிறைவேற்றுபவர்களும் கஷ்டத்திலும் நஷ்டத்திலும் கடுமையான யுத்த நேரத்திலும் பொறுமையைக் கைக்கொண்டவர்களும் ஆகிய இவர்கள் தாம் நல்லோர்கள். இவர்கள் உண்மையானவர்கள் இவர்கள் தான் பரிசுத்தவான்கள்." (2: 177)

தனியாகவோ மற்றவர்களோடு சேர்ந்தோ தினசரி 5 நேரமும் தான் வசிக்கும் சூழலில் உள்ள சகாக்களோடு சேர்ந்து வாரமொருமுறையும் தன் பிரதேசத்தைச் சேர்ந்த தனது சமூகத்தினரோடு வருடமிருமுறையும் அல்லாஹ்வைத் தொழ கடமைப்பட்டிருக்கும் ஒரு முஸ்லிம் வாழ்நாளில் குறைந்தபட்சம் ஒரு தடவை தன் உலக சகோதரர்களோடு சேர்ந்து கஃபாவிலும் அறபாவிலும் அல்லாஹ்வை வணங்குகிறான். இதுதான் இஸ்லாம் கூறும் விஸ்வ சகோதரத்துவம். உம்மத்தே முஹம்மதிய்யா.

இந்தக் கடமையைச் செய்யும்போது தன் பிரச்னைகளையும் தன் நாட்டுப் பிரச்னைகளையும் தன் சகோதரர்களோடும் விவாதித்து அபிப்பிராயங்களைப் பரிமாறிக்கொள்ள ஒரு முஸ்லிமுக்குச் சந்தர்ப்பம் கிடைக்கிறது. சாதி,சமய, மொழி,நிறவேறுபாடுகள் இவ்வாறு உருவாகும் உம்மத்தே முஹம்மதிய்யாவுக்கு—உலக சகோதரத்துவத்துக்குத் தடையாக இருக்கமுடியாது.

கஃபா இறைவனின் ஏகத்துவத்துக்கும் மனித சமூகத்தின் சகோதரத்துவத்துக்கும் ஒருநித்திய சின்னமாக விளங்குகிறது. இந்த ஏகத்துவத்தின் சின்னமாகவும் கருவூலமாகவும் வைத்து ஏகத்துவ ஏக சகோதரத்துவம் ஒன்றை நிலைநிறுத்தவேண்டுமென்பதுதான் ஹஜ்ஜின் பிரதான குறிக்கோள்.

— [இலங்கையில் இஸ்லாம் என்ற நூலிலிருந்து]

# "மத்தியஸ்தத்தை மலேசியா ஏற்கும்"

## இந்தோனேஷிய மக்களுக்கு துங்கு நேரடிச் செய்தி

கோலாலம்பூர், ஏப்ரல் 12

மலேசியாவுக்கும் இந்தோனேஷியாவுக்கு மிடையிலுள்ள தகராறுக்குச் சுமுகமான தீர்வு காண ஆசிய-ஆபிரிக்க நாடுகள் மத்தியஸ்தம் செய்ய முன்வந்தால் அதை ஏற்றுக் கொள்ள மலேசியா தயாராக இருக்கிறது என்று மலேசியப் பிரதமர் துங்கு அப்துல் ரஹ்மான் கூறினார்.

இந்தோனேஷிய மக்களுக்கு மலேசிய வானொலிமூலம்துங்கு அப்துல் ரஹ்மான் நேற்று நேரடியாக ஒரு வேண்டுகோள் விடுத்தார்.

"இந்தோனேஷிய மக்களும் மலேசிய மக்களும் ஓரே இனத்தவர்! ஒரே பண்பாடும் ஒரே மதமும் உடையவர்கள். அவர்கள் ஒற்றுமையாக வாழவேண்டியது அவசியம் இருநாட்டு மக்களும் வேற்றுமைப்பட்டுச் சண்டை போட்டுக் கொள்வது இருநாட்டுக்கும் நல்லதல்ல" என்று மலேசியப்பிரதமர் தமது வேண்டுகோளில் குறிப்பிட்டார்.

## மென் பந்தாட்ட போட்டி

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்ப்பாணம் மென் பந்தாட்டச் சங்க கூட்டத்தில் மென்பந்தாட்டப் போட்டியொன்றை முதற்தடவையாக நடாத்துவதென்று தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## பதிவு செய்தவர்களுக்கு 'பர்த்' இல்லை

நல்லூர், திங்கள்

யாழ்ப்பாணம் புகையிரத நிலையத்தில் கொழும்புக்குச் செல்லும் சிலர் 'ரயில்வேயின் 'பர்த்' டிக்கட்டுகளுக்கு பதிவு செய்திருந்தனர். ஒருசிலருக்கு மட்டும் பர்த் கிடைத்தது. ஆனால் ஏற்கனவே பதிவு செய்யப்பட்டிருந்தும் 9 பேர் ஆசனம் கிடைக்காது அவதிப்பட்டனர். இவர்களுள் ஒருவர் நீதிபதி, மற்றொருவர் எம். பி. யாவர்.

புகையிரத நிலையத்தில் புகையிரதம் வந்ததும் பர்த் முன்னரே பதிவு செய்த குறிப்பிட்ட 9 பேரும் தமக்குரிய படுக்கைகள் இல்லாதிருப்பது கண்டு திகைத்தனர். ஒருவர் நீதிபதிக்கு தமது ஆசனத்தை அளித்தார் மிகுதி எட்டுப் பேரிடமும் யாழ்ப்பாணம் புகையிரத நிலைய அதிகாரிகள் மன்னிப்புக் கோரி இரண்டாம் வகுப்புப் பெட்டி ஒன்றில் பிரயாணஞ் செய்ய வசதி செய்தனர்.

இலங்கை

## வானொலி நிர்வாகம் சீர்திருத்தப்படும்

பம்பலப்பிட்டி, திங்கள்

இலங்கை வானொலி நிர்வாகத்தை சீர்திருத்தி அமைக்க ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன திட்டமிட்டுள்ளார்.

இதேபோன்று தகவல் பகுதியையும் சீர்திருத்தி அமைக்க அவர் நடவடிக்கை மேற்கொள்ளவிருக்கிறார். தேசிய அரசாங்கத்தின் திட்டத்தை சீர்குலைக்க சில சதிவேலைகள் இடம்பெறுவதாக தெரிவிக்கப்பட்ட புகார்களைத் தொடர்ந்தே ராஜாங்கமந்திரி இவ்வித முடிவு செய்துள்ளார்.

## வானொலி நிகழ்ச்சிகள்

செவ்வாய் 13-4-65

**கொழும்பு**

(செய்திகள்: காலை 7-15, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

காலை 6-30 நாதஸ்வரம், 6-55 உதயகீதம், 7-00 துதிப் பாடல்கள், 7-30 புத்தாண்டுப் பாடல்கள், 7-45 மெல்லிசை, 8-00 பேச்சு — 'புதுவருடத்தின் முக்கியத்துவம்' — ஆர். எஸ். இரகுநாதஐயர், 8-15 கவிஅரங்கம், 9-30 நாதஸ்வரம், 10-00 ஹஜ்ஜுப்பெருநாள் அஞ்சலி, 11-30 சங்கீத நிகழ்ச்சி.

பகல் 12-00 திரைகானம், 1-00 கதம்பஇசை.

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 சிறுவர் நிகழ்ச்சி—பகுதி ஒன்று, 6-45 திரைப்படஇசை,

இரவு 6-15 கிராமசஞ்சிகை, 6-45 ஸ்ரீலங்கா குறுக்கெழுத்துப் போட்டி, 7-00 சிறுவர் நிகழ்ச்சி—பகுதி இரண்டு. 8-00 முஸ்லிம்நிகழ்ச்சி, 9-15 நேயர் விருப்பம், 9-45 கவிஅரங்கம் (மறுஒலிபரப்பு)

**புதன் 14-4-65**

காலை 6-45 உதயகீதம், 6-55 சைவநற்சிந்தனை, 7-00 துதிப் பாடல்கள், 7-30 மெல்லிசை, 8-15 இலை மியகீதங்கள்.

பகல் 12-00 திரைகானம், 1-00 கதம்பஇசை,

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 நேயர் ஒலிப்பதிவுகள், 6-45 திரைப்பட இசை.

இரவு 6-45 கிராமசஞ்சிகை, 6-45 வீணை — சரஸ்வதி குமாரசிங்கம், 7-30 கலந்தாலோசித்தல், 9-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 சினிமா வாத்தியஇசை, 9-30 நேயர்விருப்பம், 10-00 தேர்ந்தஇசை.

## கல்வி மந்திரி விரும்பவில்லை

கொழும்பு, திங்கள்

கல்வி இலாகாவிலுள்ள உத்தியோகத்தர்களால தீர்த்து வைக்கக் கூடிய இடமாற்றம் நியமனம் போன்ற சிறுவேலைகளுக்கு தன்னிடம் வருவதை கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்ல விரும்பவில்லையெனத் தெரிவித்தார்.

'அநீதி செய்யப்பட்டிருந்தால் ஏதாவது திருத்தப்பட வேண்டுமானால் அதற்குத் தயாராயிருக்கின்றேன்' என்றும் கல்விமந்திரி மேலும் அறிவித்தார்.

## இளம் பெண் தீமூட்டி தற்கொலை

மஹ்ரோகம, திங்கள்

மககமவைச்சேர்ந்த 23வயது இளம்பெண் ஜெனி என்பவர் தனது சேலையில் மண்ணெண்ணையை ஊற்றி தீ மூட்டி தற்கொலை செய்து கொண்டார். மரணவிசாரணை அதிகாரி திரு. சமரசேகர தற்கொலையெனத் தீர்ப்பளித்தார்.

## தேர்தல் ஆட்சேப வழக்குகள்

கொழும்பு, திங்கள்

சென்ற சனிக்கிழமை தாக்கல் செய்யப்பட்ட தேர்தல் ஆட்சேப வழக்குடன் இதுவரை வழக்குகளின் எண்ணிக்கை இப்போது ஒன்பதாகியுள்ளது.

மேலும் வழக்குகள் இன்னும் தாக்கல் செய்யப்படவிருப்பதாக அறியப்படுகிறது

உங்கள் அனைவருக்கும் எங்கள் புதுவருட வாழ்த்துக்கள்



# தங்கமாளிகை

யாழ்ப்பாணம்.

போன்: 281 தந்தி: ஜுவல்லர்ஸ்


# "நிபந்தனையற்ற பேச்சுக்கான அழைப்பை நிராகரித்தால்

## ரஷ்யா, சீன தலையிட்டாலும் தாக்குதலை அமெரிக்கா நிறுத்தாது'

வாஷிங்டன், ஏப்ரல் 12

வியட்நாம் பிரச்சினைக்கு ஒரு தீர்வை ஏற்படுத்த நிபந்தனையற்ற முறையில் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜோன்சன் விடுத்த அழைப்பை இதுவரை வடவியட்நாம் மறுத்து வருகிறது. வடவியட்நாம் பதில் தெரிவிக்கவில்லை என்று அமெரிக்க வெளிவிவகார உதவிமந்திரி திரு. ஜோர்ஜ் போல் நேற்று டெலிவிஷன் பேட்டியில் தெரிவித்தார்.

"இந்த திட்டத்தின் நிபந்தனையற்ற சமாதானப் பேச்சுவார்த்தைகளை வியட்நாம் நிராகரித்தால் சீனாவும், சோவியத்யூனியனும் தலையிட்டாலும்கூட, வடவியட்நாம், தென்வியட்நாமின் மீது நடத்தும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை நிறுத்தும்வரை, அமெரிக்கா வடவியட்நாம் மீது தொடர்ந்து தாக்கும்" என்று திரு. ஜோர்ஜ் போல் கூறினார்.

## பாக-இந்தோனேஷிய ஒப்பந்தம்

கராச்சி, ஏப் 12

பாகிஸ்தானும் இந்தோனேஷியாவும் கலாசார, பொருளாதார ஒத்துழைப்பு ஒப்பந்தமொன்றை அடுத்த மாதம் கைச்சாத்திடும்.

## அயூப் நம்பிக்கை

ராவல்பிண்டி, ஏப். 12

தனது சோவியத் விஜயம் பாகிஸ்தானுக்கும் சோவியத் யூனியனுக்குமிடையில் நல்லெண்ணத்தையும் ஒத்துழைப்பையும் வளர்த்து வலுப்படுத்துமென தாம் நம்புவதாக பாகிஸ்தான் அதிபர் பீல்ட்மார்ஷல் அயூப்கான் கூறினார்.

## 16 பேர் தெரிவு

கராச்சி, ஏப் 12

மேற்குப் பாகிஸ்தான் சட்டசபைக்கு நிதுகளை 16 பேர் போட்டியின்றித் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

## குருஷ்சேவை சந்திக்கமுடியவில்லை

நியூயோர்க், ஏப். 12

சமீபத்தில் சோவியத் யூனியனுக்கு விஜயம் செய்திருந்த முன்னாள் அமெரிக்க உப ஜனாதிபதி திரு. ரிச்சர்ட் நிக்சன், தாம் மாஸ்கோவிலிருக்கையில் முன்னாள் சோவியத் பிரதமர் குருஷ்சேவைச் சந்திக்கப் பெரும் முயற்சி செய்தும் பலன் கிடைக்கவில்லையென்று தெரிவித்தார். திரு குருஷ்சேவின் இல்லத்துக்குச் சென்றும் கூட அவரைச் சந்திக்க முடியாது போய்விட்டது என்று திரு. நிக்சன் சொன்னார்.

## சமாதானவாதி படுகொலை!

நிக்கோசியா, ஏப். 12

துருக்கிய-சைப்ரஸ் மக்களுக்கும் கிரேக்க சைப்பிரஸ் மக்களுக்குமிடையில் அமைதியை ஏற்படுத்தி ஒற்றுமையைக் கொண்டுவர முயற்சி செய்த துருக்கிய சைப்ரஸ் தொழிற்சங்கத் தலைவர் ஒருவர் கோரமாகப் படுகொலை செய்யப்பட்டுக் கிடக்கக் காணப்பட்டார். அவருடன் சென்ற மற்றொரு தொழிற்சங்கவாதியும் கொலையுண்டு கிடக்கக் காணப்பட்டார். அவர்களிருவரும் சென்ற மோட்டார் கார் தீவைத்துச் சேதப்படுத்தப்பட்டிருந்தது.

## வலி-மேற்கில் தேசிய தினம்

சுழிபுரம், ஞாயிறு

புதுவருடப் பிறப்பன்று சமரசப் பொலிஸ் உத்தியோகஸ்தர்கள், வலி-மேற்கு கிராம சேவையாளர்கள் சேர்ந்து தேசிய விளையாட்டு விழாவை நடத்த ஒழுங்குகள் செய்துள்ளனர்.

'செல்வரத்தினம் வெற்றிக் கிண்ண'த்திற்காக பொன்னாலை விளையாட்டு மைதானத்தில் கரபந்தாட்டப் போட்டி நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. புதுவருட தினத்தன்று இரண்டு மணி தொடக்கம் மாலை ஆறு மணி வரையும் போட்டி நடைபெறும்.

போட்டியில் வட்டுக்கோட்டை காந்திஜி கோஷ்டியினர், சில்லாலை வை. எம். சி. ஏ. கோஷ்டியினர், ஆனைக்கோட்டை ஐக்கிய விளையாட்டுக் கழகத்தினர் ... டியினர் ஆகியோர் கலந்து கொள்வார்கள்,

## "சகல முயற்சிகளையும் பிரிட்டன் மேற்கொள்ளும்"

— வில்சன்

லண்டன், ஏப்ரல் 12

வியட்நாம் பிரச்சினைக்கு ஒரு சுமுகமான தீர்வு காண்பதற்கு சகல முயற்சிகளையும் பிரிட்டன் மேற்கொள்ளும் என்று பிரிட்டிஷ் பிரதமர் ஹரோல்ட் வில்சன் தெரிவித்துள்ளார்.

வியட்நாம் தகராறுக்குத் தீர்வுகாண மகாநாடு ஒன்றைக் கூட்டுவதற்கான சகல முயற்சிகளையும் பிரிட்டன் மேற்கொள்ளும் என திரு. வில்சன் கூறினார்.

(8-ம் பக்கம் பார்க்க)


அன்பர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எமது உளங்கனிந்த புதுவருட வாழ்த்துக்கள்!

# ஞானபண்டிதன்

ஜவுளிக்கடை

228, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

போன்: 7107 T'Grams: GEEPEETEE

அனைவருக்கும் எமது புதுவருட வாழ்த்துக்கள்

# "ஜப்பான்"

வடபகுதியில் பழையதும் மிகவும் சிறந்ததுமான ஸ்தாபனம்

## கே. ஆறுமுகம்பிள்ளை அன் சன்ஸ்

64, கன்னாதிட்டி, : யாழ்ப்பாணம்.

எங்கள் வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக.

யாழ்ப்பாண

# ஐக்கிய வியாபாரச் சங்கம்

420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்

தொலைபேசி எண்கள்: 370, 438 537. தந்தி: "லக்ஷ்மி"

வெற்றி! மாபெரும் வெற்றி!

டயர் றிபில்டிங் சகாப்தத்திலே மகத்தான வெற்றி!

1. கவர்ச்சியான அழகு
2. நீடித்த பாவனை
3. உத்தரவாதமுள்ள வேலைப்பாடு

இன்றே உங்களது தேய்ந்துபோன டயர்களைப் புதுப்பிப்பதற்கு எம்மிடம் கொடுங்கள்.

குறுகிய காலத்தில் புதிய டயரைப் போன்று புதுப்பித்துத் தருவோம்.

# நோர்தேன் இன்டஸ்றீஸ்

8/1, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

# அருத எண்ணெய்

பல்வேறு வகையாக பலன் தரக்கூடிய ... பலன் கொடுக்கும் ஒரு அற்புதமான கூந்தல் தைலம்.

ஆசாங்கத்தில் பதிவுசெய்யப்பட்ட ஆயுர்வேத முறைப்படி தயாரிக்கப்பட்ட அருத எண்ணெய் — அபூர்வமான தமிழ் மூலிகைகளையும், வேறு ஆயுர்வேத மூலிகைகளையும் சேர்மானமாகக் கொண்டது.

உஷ்ணமான உடல் உள்ளவர்களுக்கும், உஷ்ணப் பிரதேசங்களில் வசிப்பவர்களுக்கும் அதிசயிக்கத்தக்க பலன் அளிக்கவல்லது! இதனை தலையில் தேய்த்த மாத்திரத்தில்.... கூந்தல் அடர்த்தியாகவும், நீளமாகவும் வளரும். தலைமயிர் உதிர்வது, நரைப்பதும் நிற்கும் மூளைக்குக் குளிர்ச்சியும், கண்களுக்குப் பிரகாசமும் உண்டாகும். நீங்காத ஜலதோஷமும், பீனிசமும் நீங்கும். அதுமட்டுமா?

கண் — தலை — காது — மூக்கு

சம்பந்தப்பட்ட சகல வியாதிகளும் குணமாகும்!

—சிறுவர் முதல் பெரியோர்வரை பாவிக்கலாம்—

தயாரிப்பாளர்:

பி. எம். திசாநாயக்க

(வைத்திய சேவிக்கின் தாய்மார்)

அருத எண்ணெய் அலுவலகம், கண்டி ரோட், கம்பளை

யாழ்ப்பாணத்தில் ஏகவிற்பனையாளர்:

எஸ். சுப்பிரமணியம் அன் கொம்பனி

(ஏற்றுமதி, இறக்குமதி வியாபாரிகள் ...)

53, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(தொலைபேசி: 541, 7068)

# மில்க் வைற் சோப்

பாவிப்பாளர்களுக்கும் விற்பனையாளர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் எமது உளங்கனிந்த எமது புத்தாண்டு வாழ்த்துக்கள் உரித்தாகுக

மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்.

அனைவருக்கும் எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

எம்மிடம் நைலோன், குறுலோன் மீன்பிடி வலைகளும் நூல்களும் மற்றும் மீன்பிடி உபகரணங்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

# 'இராணி சகுந்தலா'

RANI SAKUNTHALA

வட்டு மேற்கு, வட்டுக்கோட்டை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நறுமணங்கமழும் . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

செய்கிறது. ஆகவே இத்திருநாள் வாரத்தில் யாவரும் இந்நாட்டை ஓர் அழகிய நறுமணம் கமழும் நந்தவனம் ஆக்குவோம் என சங்கற்பம் செய்து கொள்வோமாக!

எத்துணை அழகுள்ளதாயினும் ரோசாச்செடிகளை மட்டும் கொண்ட ஒரு பாத்தி பூந்தோட்டமாகிவிடாது அதே போலதான் நறுமணம் கமழும் மல்லிகைச்செடி மட்டும் நந்தவனமாகியும் விடாது ஒரு பூந்தோட்டத்தில் பல்வேறு வகையான பூச்செடிகள் வெவ்வேறு பாத்திகளில் ஒழுங்குமுறையாக இருக்கவேண்டுவது போல், எம்நாட்டிலும், பல்வேறு கலாச்சாரங்களும் பல்வேறு மதங்களும் ஒழுங்காக அமைவதற்கு நிரம்பிய இடமுண்டு. அதுவே ஆண்டவன் சித்தம் தனித்தன்மையைப் பேணி, அவை வளர இடமளிப்பதன் மூலமே இந்நாட்டை ஒரு நந்தவனமாக்கவும். பல்வேறு கலாச்சார மலர்களின் அழகையும், நறுமணத்தையும் நாடு என்னும் நந்தவனத்தில் நாம் பூரணமாக அநுபவிக்கவும் முடியும். அதைவிடுத்து அனைவரையும் ஒரேமொழியை பேச வைப்பதும், ஒரே மதத்தைத் தழுவும்படி செய்வதும், ஒரே பாத்தியில் கதம்பமாக பல்வேறு மலர்செடிகளை நாட்டி அதிலிருந்து ஒரேவிதமலர்கள் பூக்க வேண்டுமென எதிர்பார்ப்பதை போலாகும் இது எவ்வளவு சாத்தியமற்றதென்பதற்கு கடந்த 9 வருடகால வரலாறு சான்றாகும்.

பொதுவுடமை சர்வாதிகாரத்தை நோக்கி விரைந்து கொண்டிருந்த கூட்டரசாங்கத்தை தோற்கடிப்பதிலும் பின் ஒரு தேசிய அரசாங்கத்தை நிறுவுவதிலும் நாட்டின் ஜனநாயக சக்திகளுக்கு உதவியதன் மூலம் ஒற்றுமை இலங்கையே தம் விருப்பம் என்பதை தமிழ்பேசும் மக்கள் தம் சிங்கள சகோதரர் யாவரும் உணரும்படி செய்துவிட்டனர்.

### சமஷ்டிமூலம் ஒற்றுமை

சமஷ்டி என்னும் ஒரு நந்தவன ஆட்சியை நிறுவி ஒற்றுமை இலங்கையைக் காணத் துடிக்கும் தமிழ்பேசும் மக்களின் மேலான நல்லெண்ணத்தைப் பலரும் சரியாகப் புரிந்து கொள்ளத் தவறிவிட்டார்கள். தேசிய வரலாற்றின் ஓர் இக்கட்டான கட்டத்தில் தேசிய அரசாங்கம் ஒன்றை ஏற்படுத்த சிங்கள மக்களுக்கு கைகொடுத்து உதவியதன் மூலம் தமிழ்பேசும் மக்களின் தலைவர்களும் அவர்களது கட்சிகளும் நாட்டு நலனில் தமிழ்பேசும் மக்கள் கொண்டுள்ள அக்கறையை யாவருக்கும் உணர்த்திவிட்டார்கள். இஸ்லாமிய, கிறிஸ்தவ, பௌத்த, இந்து மக்களுக்கும் தமிழ், சிங்களம் ஆகிய மொழிகளுக்கும் அவற்றின் கலாச்சாரங்களின் வளர்ச்சிக்கும் பூரண இடமளிக்கும் ஒரு சமஷ்டி அமைப்பு கொண்ட ஒற்றுமை இலங்கையை அமைத்து கிழக்கில் ஒருசுவிட்சர்லாந்தாக இந்நாட்டை ஆக்குவோமென இப்புனித பெருநாள் வாரத்தில் சங்கற்பம் செய்து கொள்வோம்.

இஸ்லாமிய, கிறிஸ்தவ, பௌத்த, இந்துமக்கள் யாவருக்கும் யாழ்ப்பாண நகரமக்கள் சார்பில் எனது பெருநாள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

# தமிழரசு யு என் பி;

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

உரிமைகளைப் பெறுவதற்கு இப்போது ஏற்ற தருணம் வாய்த்துள்ளது. தேசிய ஒற்றுமையால்தான் நாம் எமது பலத்தை வளர்த்துக்கொள்ள வேண்டும். சில தீயசக்திகள் இந்த ஒற்றுமையைக் குலைக்க சூழ்ச்சிகள் செய்து கொண்டிருக்கின்றன. இத் தீய சக்திகளை சிங்களச்சகோதரர்களுடன் ஒன்றுசேர்ந்து எதிர்த்து வெற்றி காணவேண்டும்.'

காங்கேசன்துறை தமிழரசுக் கட்சிக்கிளைத் தலைவரான திரு. ஆ. தெட்சணாமூர்த்தி பேசுகையில், சென்ற 22-ம் திகதி நடைபெற்ற பாராளுமன்றப் பொதுத்தேர்தல் இலங்கையில் ஒரு புதிய திருப்பத்தை ஏற்படுத்தியுள்ளது, அந்தத் திருப்பம்தான் தமிழ் பேசும் இனமும் சிங்கள மக்களுக்குமிடையேயும் தோன்றியுள்ள ஒற்றுமையாகும்

காங்கேசன்துறை பட்டின சபை அங்கத்தவர் திரு. க. வைத்திலிங்கம் பேசுகையில், தமிழரசுக் கட்சியினர் இப்போது செய்துகொண்டுள்ள ஒப்பந்தம் இப்போதுள்ள சூழ்நிலையில் வரவேற்கத்தக்கதே என்றார்.

திருவாளர்கள் மு. ஆலாலசுந்தரம், சிவகுருநாதி ஆகியோரும் பேசினர்.

### மாவிட்டபுரத்தில்

காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே. வி. செல்வநாயகம் இன்றுகாலை தமது தொகுதியிலுள்ள பல கிராமங்களுக்கு விஜயஞ் செய்து வாக்காளர்களைச் சந்தித்துப் பேசினர்.

மாவிட்டபுரம் பொதுமக்கள் திரு. செல்வநாயகத்திடம் சமர்ப்பித்த வேண்டுகோள் ஒன்றினைத் தொடர்ந்து அவர் இன்று காலை மாவிட்டபுரம் உப-தபாற்கந்தோருக்கும் விஜயம் செய்தார் 1963-ம் ஆண்டிலேயே இடிந்த உபதாற்கந்தோர் தரமுயர்த்தப்பட வேண்டிய நிலையை அடைந்த போதிலும் கடந்த இரு வருடங்களிலும் இதற்கான எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. கடந்த வாரம் பால் அமைச்சில் இருந்து கிடைத்த கடிதமொன்றில் தபாற்கந்தோர் தரமுயர்த்தும் போதிய பணவசதி இல்லை என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

திரு. செல்வநாயகம் தபாற்கந்தோரின் நிலைமையைவிட்டு உடனடியாக தபால் அமைச்சருடன் பேச்சு நடத்துவதாக உறுதியளித்தார்.

திரு. செல்வநாயகத்திற்கு மாவிட்டபுரத்தில் வரவேற்பு அளிக்கப்பட்டது.

# மத்திய அமெரிக்காவில் புயலுக்கு 180 பேர் பலி
## ஆயிரத்துக்குமதிகமானோர் காயம்

நியூயோர்க், ஏப். 12

மத்திய அமெரிக்காவில் நேற்றிரவு கோரப்புயல் வீசியது இதில் 180 பேர் மாண்டதாகவும் ஆயிரத்துக்குமதிகமானவர்கள் காயமடைந்துள்ளதாகவும் இதுவரை கிடைத்த தகவல்களிலிருந்து தெரிகிறது.

கட்டிடங்களுக்குப் பெரும் சேதமேற்பட்டுள்ளது. இடிபாடுகளுக்குட்பட்டவர்களை மீட்கும் வேலை நடைபெற்று வருகிறது. சிக்காக் கோவில் ஒரு பெயர்ப்பலகை விழுந்ததில் இருவர் மாண்டனர். வீதிகளில் நின்ற கார்கள் சூறாவளிக் காற்றினால் தூக்கி வீசப்பட்டன. மிச்சிகன் ராஜ்யத்தில் அவசரகாலநிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

# "சகலமுயற்சி . . .

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த மகாநாட்டில் தென் வியட்நாம், வடவியட்நாம், சீனா, ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகள் கலந்து கொள்ளும் என்று திரு. வில்சன் கூறினர்.

திரு. வில்சன் இவ்வாரம் வாஷிங்டன் செல்லவிருக்கிறார் வாஷிங்டனில் ஜனாதிபதி ஜோன்சனுடன் வியட்நாம் பிரச்னைபற்றி அவர் பேசுவார்.

# தர்மபுரியில் காங்கிரஸ் வெற்றி

சென்னை, ஏப். 12

சென்னை கீழ் சபைக்கான தர்மபுரி இடைத்தேர்தலில் காங்கிரஸ் கட்சியைச்சேர்ந்த திரு. டி. என். வடிவேலு கவுண்டர் வெற்றி பெற்றிருக்கிறார். அவருக்கு 35666 வாக்குகளும், திமுகவைச் சேர்ந்த சுப்ரமணியக் கவுண்டருக்கு 24666 வாக்குகளும் கிடைத்தன.

# புதுவருட விழா

யாழ்ப்பாணம், செவ்.

இன்று புதுவருட தினத்தன்று, வண்ணை கிள்ளர்லேன் முத்துமாரி அம்மன் கோவிலில் விசேஷ திருவிழா நடைபெறுகிறது. பிற்பகல் 1-55 மணிமுதல் 2-30 மணிவரை விசேட கும்பாபிஷேக ஆராதனையும் 3-30 மணி தொடக்கம் 5 மணிவரை ஆர். வி. செல்வராசாவின் நிவாரின் கச்சேரியும், பி. கோதண்டபாணியின் தவில் கச்சேரியும், எம். எஸ். சண்முகநாதனின் கலைவர கச்சேரியும் நடைபெறும். மாலை 5 மணிக்கு அம்பாள் குதிரை வாகனத்தில் எழுந்தருளி வீதிவலம் வருவார்.

# இன்று

சிரணிகாமம்மன் பிரவியில் இன்று நல்லூர் பஜனை சபையின் பிரசாரகர் திரு க. நடராசா "சக்தியின் பெருமை" என்னும் பொருள்பற்றி இரவு 7 மணிக்கு ஓர் கதாப் பிரசங்கம் நிகழ்த்துவார்.


REGAL JAFFNA
NOW SHOWING
Kirk Douglas
Sylvana Mangano
Anthony Quinn
in
ULYSSES
(Technicolor)



ஆதரவாளர்கள் அனைவருக்கும்
எமது புத்தாண்டு வாழ்த்துக்கள்!

சிறந்த 'புளோக்' தயாரிப்பவர்கள்

யாழ்ப்பாணத்தில்
ஒரே ஒரு ஸ்தாபனம்

கொழும்புஸ்ரூடியோ
ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.



விஜயா
ஹாட்வெயர் ஸ்ரோர்ஸ்
திறப்பு விழா

நாளை 14-4-65 புதன்கிழமை
காலை 9-00 மணியளவில் வரும் சுபவேளையில்
திரு. அ. அமிர்தலிங்கம் அவர்கள்
(பாராளுமன்ற உறுப்பினர்)
மேற்படி ஸ்தாபனத்தை திறந்துவைப்பார்.
அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

146, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
போன்: 357

இங்ஙனம்
தங்கள் நல்வரவை நாடும்
ச. அ. நடராசா
(உரிமையாளர்)


## பண்டித வகுப்புக்கள்

வண்ணை காவலர் பாடசாலையில் நடைபெற்று வரும் பிரவேச, பாலபண்டித, பண்டித சமஸ்கிருத வகுப்புக்கள் 15-4-65 வியாழக்கிழமை காலை 9 மணிக்கு பாடம் தொடங்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கற்கும் மாணவரும் கற்க விரும்பும் மாணவர்களும் அன்று சமூகந்தருவாராக. வேதனம் இல்லை.

பண்டித. வித்துவான்
இ. திருநாவுக்கரசு,
தலைமை ஆசிரியர்.


127

## மரண அறிவித்தல்

உரும்பராய் இந்துக்கல்லூரி ஆசிரியர் சங்கீதபூஷணம் திரு. ச செல்லத்துரை அவர்கள் (12-4-65) நேற்றுக் காலை சிவபதமடைந்துவிட்டார். இவர் கோலாலம்பூரில் இருக்கும் அருளம்பலத்தின் சகோதரரும், இரத்தினத்தின் கணவரும், செல்வகுமாரன், செல்வராணி ஆகியோரின் தந்தையுமாவார். ஈமைச்சடங்குகள் இன்று மாலை நடைபெறும்.

சுப்பிரமணியம். 47


கிங்ஸ்லி (கொழும்பு)
பிரபாஸ் (வெள்ளவத்தை)
கப்பிட்டல் (கொட்டாஞ்சேனை)
நவா (கும்பனித்தெரு)
விஜயா (மட்டக்களப்பு)
மோடர்ன் (பண்டாரவளை)
விஜிதா (ஹட்டன்)
தீவொலி (நுவரேலியா)
ஜூபிட்டர் (குருநாகலை)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்


இப்பத்திரிகை ஈழநாடு லிமிடெட்டுக்காக அவர்களால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 86-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் 13-ம் திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org